## குளித்தலை நகராட்சி

2022ஆம் வருடம் மே மாதம் 09ஆம் தேதி திங்கட்க்கிழமை காலை 11.00 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள்பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

———————

**18.04.2022ஆம் தேதிய சாதாரணக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதன் பொருள்கள்–**

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி–2022 மற்றும் மார்ச்–2022.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி–2022 மற்றும் மார்ச்–2022.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. அரசாணை(ப) எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.1) துறை, நாள்– 17.01.2013 மற்றும் அரசாணை(நிலை) எண்.118, நாள்–26.09.2014.இன்படி, குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், கீழ்க்கண்ட விபரப்படி 2022–2023ஆம் ஆண்டுக்கு வாங்குவதற்கும், அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்குவதற்கும் உத்தேச செலவினம் ரூ.40,00,000/–க்கு (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| உணவு பொருட்கள் மற்றும் சப்ளைசெய்யும் நிறுவனம் விபரம் | | | |
|---|---|---|---|
| 1) | அரிசி | = | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிட்டங்கி, அய்யர்மலை |
| 2) | மளிகை பொருட்கள் | = | சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி, திருச்சி |
| 3) | எரிவாயு உருளைகள் | = | ஸ்ரீமூகாம்பிகை கேஸ் ஏஜென்சீஸ், குளித்தலை. |
| 4) | பால் விநியோகம் | = | ஹமீதாபானு (ஆவின் பால் ஏஜென்சி நெ.A3002) என்பவர் மூலம் செலவினம் மேற்கொள்ளுதல் |
| 5) | காய்கள் விநியோகம் | = | M.ஸ்ரீதரன், OMS காய்கறி கடை என்பவர் மூலம் செலவினம் மேற்கொள்ளுதல் (உழவர் சந்தை விலை அடிப்படையில்) |
| 6) | அம்மா உணவகத்தில் பணிபுரியும் ‘‘ஸ்ரீசாய்ராம் மகளிர் சுயஉதவி குழு’’ பணியாளர்களின் மாத ஊதியம் | | |
| 7) | உணவு விநியோகம் செய்ய டோக்கன்கள் அச்சடித்தல் மற்றும் மின்கட்டணம் செலுத்துதல். | | |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1083/2014/டி2)

பொருள்– 04. இந்நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் 2022–2023ஆம் ஆண்டுக்கு அலுவலக வேலையின் காரணமாக வெளியூர் சென்று வருவதற்கு பயணப்படி வழங்க வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ஆண்டுக்கு ரூ.5,00,000/–க்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.471/2022/அ2)

பொருள்– 05. குளித்தலை நகராட்சியின் கீழ்க்கண்ட ஆண்டுக் குத்தகை இனங்களுக்கு 2021–2022 முதல் 2023–2024 வரை தொடர்ந்து 9(ஒன்பது) முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும், ஏலத்தில் கலந்துகொள்ள எவரும் முன்வராத காரணத்தால் கீழ்க்கண்ட விவரப்படி வைப்புத் தொகை, சால்வன்சி மற்றும் கூடுதல் வைப்புத் தொகை மறு நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | உரிமம் விபரம் | முன் வைப்புத் தொகை ரூ. | தேவையான சால்வன்சி மதிப்பு | சொத்து மதிப்பு இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகள் மற்றும் ஆட்டோ முதலிய வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 3,00,000/– | 10,00,000/– | 5,00,000/– |
| 2) | இருசக்கர ஊர்திகள் நிறுத்துமிடம் | 3,00,000/– | 10,00,000/– | 5,00,000/– |
| 3) | தினசரி சாலையோரக் கடைகளில் வசூல் செய்துகொள்ளும் உரிமம் | 5,00,000/– | 20,00,000/– | 10,00,000/– |
| 4) | ஆடு அடிக்கும் தொட்டி கட்டணம் | 75,000/– | 2,00,000/– | 1,00,000/– |

அலுவலக குறிப்பு– 1).மேற்கண்ட குத்தகை உரிமம் இனங்களுக்கு தொடர்ந்து பலமுறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும், தொகை செலுத்தி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராத காரணத்தால் மேற்கண்டவாறு மறு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை மன்றம் ஏற்கலாம்.

2). ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3). அரசாணை(நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.துறை), நாள்–19.09.2008ன்படி அனுமதிக்கலாம்.

4). 2022–2023ஆம் நிதியாண்டு முதல் 2024–2025ஆம் நிதியாண்டு வரையிலான காலத்திற்குரிய பொது நிபந்தனை மற்றும் சிறப்பு கட்டுப்பாடுகளுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

5). ஏல தொகை உறுதி செய்யப்பட்டவுடன் அத்தொகையினை உடன் செலுத்த வேண்டும். அதன் பின்னரே உரிம உத்தரவு வழங்க அனுமதிக்கலாம். ஏலத் தொகை ஒரு ஆண்டுக்கு என்ற அடிப்படையிலேயே ஏலம் விடப்படும்.

6). முதல் ஆண்டு ஏல உரிம காலம் ஒப்படைக்கும் தேதியிலிருந்து 31.03.2023 வரையும், இரண்டாம் ஆண்டுக்கான உரிமத் தொகை முதல் ஆண்டு உரிமத் தொகையில் இருந்து 5% உயர்வு செய்து 01.04.2023 முதல் 31.03.2024 வரையும், மூன்றாம் ஆண்டுக்கான உரிமத் தொகை இரண்டாம் ஆண்டு உரிமத் தொகையில் 5% உயர்வு செய்து 01.04.2024 முதல் 31.03.2025 வரை உரிமம் ஒப்படைக்க அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1769/2020/அ2)

பொருள்– 06. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான 7.50 HP ஆயில் இஞ்சின் இரண்டு பழுது ஏற்பட்டு இயக்க முடியாமல் நின்றுவிட்டது. மேற்படி ஆயில் இஞ்சினை பழுது பார்த்தால் மழை காலங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரை வெளியேற்றுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதால் இந்த இரண்டு 7.50 HP இஞ்சினை பழுது நீக்கம் செய்ய வேண்டி உள்ளது. எனவே, இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.14000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இதற்கு ஆகும் செலவினத்தை 2022–2023ஆம் ஆண்டு பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.455/2022/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு பணிக்கும், டெங்கு கொசு புழுக்களை ஒழிப்பதற்கும், மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் வகையில் கொசுப்புழுக்களை ஒழிப்பதற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி 24 டெங்கு தடுப்பு பணியாளர்களை (DBC) ஸ்ரீசாய் மகளிர் சுயஉதவிக்குழு மூலம் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு வீடுகளில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு எண்.இ1/4822/2020, நாள்–05.06.2020இன்படி நாள் ஒன்றுக்கு ஒரு(1) நபருக்கு தினக்கூலி ஊதியம் ரூ.362/– வழங்கவும், 2022–2023ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,00,000/–க்கு (ரூபாய் இருபத்து ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினம் 2022–2023ஆம் ஆண்டு வருவாய் நிதியில் ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1326/2017/எச்1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்கள் மற்றும் புகைபோக்கி இயந்திரங்களுக்கு 2022–2023ஆம் ஆண்டிற்கு தேவையான எரிபொருள் K.M.V.N.பிரேம்குமார் பெட்ரோல் பங்க், குளித்தலை நிறுவனத்தின்மூலம் நேரடியாக வாங்கிகொள்வதற்கும், அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.19,00,000/–க்கும் (ரூபாய் பத்தொன்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வாகன விபரம் | | | வ. எண். | வாகன விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1) | TN-47-AS-5370 | குப்பை லாரி | | 6) | TN-47-AY-6449 | BEML – Front & Back Loader |
| 2) | TN-47-X-0031 | குப்பை லாரி | | 7) | TN-47-BW-1379 | கிருமி நாசினி தெளிக்கும் டிராக்டர் |
| 3) | TN-47-AS-5098 | ஆட்டோ | | 8) | புகைபோக்கி இயந்திரங்கள் | |
| 4) | TN-47-AS-5109 | ஆட்டோ | | 9) | TN-47-X-3173 | ஈப்பு வாகனம் |
| 5) | TN-47-F-1522 | கழிவுநீர் வாகனம் | | | | |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினம் வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.555/2020/எச்1)

பொருள்– 09. குளித்தலை நகர எல்கைக்குட்பட்ட அனைத்து பொதுக் கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடங்களில் உள்ள நச்சுத் தொட்டிகள் அனைத்தும் நிரம்பி மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால், பொதுமக்கள் பயன்படுத்துவது மிகவும் கஷ்டமாக உள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளி கோரபபட்ட கழிப்பிடங்கள் தவிர, மற்ற அனைத்து நச்சுத் தொட்டிகளையும் சுத்தப்படுத்தும் பணி செய்வதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 லட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கும் பணியினை செய்வதற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.476/2022/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சியில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களில் ஏற்படும் அவசர பழுதுகள் நீக்கம் செய்தல், பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல், ஆயுள் காப்பீடு புதுப்பித்தல் மற்றும் சாலை வரி செலுத்துதல் போன்ற பணிகளுக்கு 2022–2023ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.8.00 லட்சம் (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வாகன விபரம் | | | வ. எண். | வாகன விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1) | TN-47-X-3173 | ஈப்பு வாகனம் | | 5) | TN-47-AS-5109 | ஆட்டோ |
| 2) | TN-47-AS-5370 | குப்பை லாரி | | 6) | TN-47-F-1522 | கழிவுநீர் வாகனம் |
| 3) | TN-47-X-0031 | குப்பை லாரி | | 7) | TN-47-AY-6449 | BEML – Front & Back Loader |
| 4) | TN-47-AS-5098 | ஆட்டோ | | 8) | TN-47-BW-1379 | கிருமி நாசினி தெளிக்கும் டிராக்டர் |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட வாகனங்களின் செலவினத்தை வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.469/2022/எச்1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு மற்றும் பொது சுகாதாரப் பிரிவு வாகனங்கள் தற்பேபது உபயோகப்படுத்தப்பட்டு சுமார் 20 வருடங்களுக்கு மேலாகிவிட்டதாலும், அதன் இயக்கம் தன்மையை இழந்துவிட்டதாலும், 20 வருடங்களுக்குமேல் உள்ள வாகனங்கள் மீண்டும் பயன்படுத்த அரசு ஆணையின்படி அனுமதி இல்லை என்று கூறப்பட்டுள்ள நிலையில் கீழ்க்கண்ட வாகனங்களை கழிவு நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வாகனத்தின் பதிவு எண். | வாகனம் வாங்கப்பட்ட வருடம் | வாகனம் நிறுத்தப்பட்ட வருடம் |
|---|---|---|---|
| 1) | TN-47-E-6035 | 1997 | 2016 |
| 2) | TN-47-D-1770 | 1998 | 2015 |
| 3) | TN-47-D-0931 | 1999 | 2001 |
| 4) | TN-47-X-0030 | 2010 | 2014 |
| 5) | TN-47-X-0264 | 1998 | 2018 |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.338/2022/இ1)

பொருள்– 12. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளில் ஏற்படும் இறப்பு நிகழ்வின்போது புறப்படும் இறுதி ஊர்வலத்தின்போது, வரப்பெற்ற மாலைகள், பூக்களை சாலைகளில் சிதறிக்கொண்டு செல்லப்படுகின்றது. இதனால் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்படுகிறது. எனவே, அனைத்து மக்களுக்கும் நலன் அளிக்கும் விதமாக, இறப்பு நிகழ்வுக்கு வரப்பெறும் மாலைகள், பூக்களை தெருவில் சிதறாமலும், தெருக்களில் உள்ள மின்கம்பிகளில் விட்டெறியாமலும், அமைதியாக இறுதி ஊர்வலம் செல்லவும், குளித்தலை நகரத்தையும், பொது மக்களின் பொது சுகாதாரத்தையும் பேணிகாக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுதல் வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.473/2022/இ1)

பொருள்–13. குளித்தலை நகராட்சி அண்ணாநகர் 3வது தெருவில் ஏற்கனவே உள்ள தரைமட்ட பாலம் உடைந்து வாய்க்கால் தண்ணீர் ஓடாமல் தேங்கி நிற்கிறது. எனவே, மேற்கண்ட தரைமட்ட பாலத்தை புதிதாக அமைக்கவும், அதனையொட்டி உள்ள சாக்கடை வாய்க்கால் தூர்ந்துபோய் உள்ளதை புதிதாக அமைக்கவும், மதிப்பீடு ரூ.3.00 லட்சத்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) தயார் செய்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணியினை பொது நிதி 2022–2023ஆம் ஆண்டில் ஈடுசெய்து கொள்ளலாம்.
(ந.க.எண்.474/2022/இ1)

பொருள்–14. குளித்தலை நகராட்சி வார்டு எண்.16, என்.ஜி.ஜி.ஓ.காலனியில் சாலையில் மழைக்காலங்களில் தண்ணீர் சாலையில் தேங்கி பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் பாதிப்பும் மற்றும் தொற்று வியாதிகள் வருவதற்கு அதிக வாய்ப்பும் இருப்பதால், மேற்கண்ட இடத்தில் கான்கிரீட் சாலை அமைத்து, அதனை சரிசெய்வதற்கு மதிப்பீடு ரூ.5,50,000/–க்கு (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தயார் செய்து, மேற்படி செலவினத்திற்கும், பணியினை செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் ஆண்டு வருவாய் நிதியில் ஈடுசெய்துகொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.477/2022/இ1)

பொருள்–15. குளித்தலை நகராட்சி அலுவலகத்தின்மேல் ‘‘தமிழ் வாழ்க’’ என்ற வாசகம் தாங்கிய போர்டு வைக்க வேண்டும் என்று மன்றத் தலைவர் அவர்கள் கூறியதின்பேரில், ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள போர்டை மராமத்துப் பணிகள் செய்து பொருத்துவதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.90,000/– (ரூபாய் தொண்ணூறு ஆயிரம் மட்டும்) செலவினத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை 2022–2023ஆம் ஆண்டு நிதி நிலையில் ஈடுசெய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.478/2022/இ1)

பொருள்–16. இந்நகராட்சிக்கு சொந்தமான காவேரிநகர் சிறுவர்கள் பூங்கா மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்கண்ட பூங்காவை மன்றத் தலைவர் மற்றும் ஆணையர் அவர்களால் பார்வையிட்டு பூங்காவை புனரமைப்புப் பணிகள் செய்ய வேண்டும் என்று கூறியதின்பேரில் மின்மோட்டார், நடைபாதை, பூச்செடிகள், விளையாட்டு சாதனங்கள் மற்றும் நடைபாதை பழுதடைந்த இடத்தில் மராமத்துப் பணிகள் மற்றும் இதரப் பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ.4.00 லட்சம் (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) தயார் செய்து நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). 2022–2023ஆம் ஆண்டு வருவாய் நிதியில் செலவினத்தை ஈடுசெய்யவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.479/2022/இ1)

பொருள்–17. குளித்தலை நகராட்சி சபாபதிநாடார்தெரு தெற்கு மற்றும் வடக்கு வாய்க்கால் மேட்டுத் தெருவில் பாலம் அருகில் மழைநீர் வடிகால் மற்றும் கான்கிரீட் சாலை சீரமைப்புப் பணி செய்வது மிகவும் அவசியமாகிறது. மேற்கண்ட பணிகளை செய்வதற்கு மதிப்பீடு ரூ.1.50 லட்சத்திற்கு (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பாதாயிரம் மட்டும்) தயார் செய்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.475/2022/இ1)

பொருள்– 18. இந்நகராட்சிக்கு சொந்தமான பெரியார்நகரில் செயல்பட்டுவரும் நுண்உயிர் கிடங்கில் தினந்தோறும் குப்பைகள் பிரிக்கப்பட்டு வரப்பெறுவதை எவ்வளவு பொருட்கள் வரப்பெற்றது என்பதை அறிய எடை பார்க்கும் இயந்திரம் தேவைப்படுவதால், இரண்டு எண்ணங்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/–க்கு (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.436/2022/இ1)

பொருள்– 19. குளித்தலை நகராட்சி வார்டு எண்.9, வடக்கு முத்துராஜாதெருவில் சமுதாய மேடை அமைக்கும் பணிக்கு, பொதுமக்கள் முன்வந்து எங்கள் பகுதியில் பொது காரியங்கள் செய்வதற்கு இடவசதி இல்லை என்பதால், நமக்கு நாமே திட்டத்தின்மூலம் பொதுமக்களாக சேர்ந்து ரூ.1.00 லட்சம் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) தொகை கொடுப்பதாகவும் மேற்படி கூடுதல் தொகையை மேற்படி திட்டத்தின்மூலம் செய்துகொடுக்க கோரியதின் அடிப்படையிலும் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ரூ.3.00 லட்சத்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் பரிந்துரைக்கலாம்.
(ந.க.எண்.468/2022/இ1)

பொருள்– 20. நகரின் மையப்பகுதியான கந்தசாமிபிள்ளைதெரு, சத்திரம்பின்புறம்தெரு, கால்லப்ட்டரைதெரு, ஆண்டார்தெரு, பள்ளிவாசல்தெரு, புதுக்கோர்ட்தெரு ஆகிய தெருக்கள் இணைத்து செல்லும் வாய்க்காலில், மழை காலங்களில் ஏற்படும் அதிகளவிலான மழைநீர் செல்லும்போது அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். அதனால், அப்பகுதியில் உள்ள வாய்காலில் தூர்வாரும் பணி செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட பணியினை செய்வதற்கு ரூ.8.00 லட்சத்திற்கு (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் நிதி ஆண்டில் வருவாய் நிதியிலிருந்து ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.233/2022/இ1)

பொருள்– 21. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு மின்விளக்குகள் அடிக்கடி பழுதாகிவிடுகிறது. எனவே, அதனை உடனடியாக மாற்றுவது அவசியமாகிறது. எனவே, மின்சார செலவினத்தை குறைக்கும் விதமாக, 24 வார்டுகளிலும் LED மின்விளக்குகளாக மாற்றுவது நகராட்சிக்கு செலவினத்தை குறைப்பதற்கு ஏதுவாக உடனடியாக மின்விளக்குகள் எரியாத இடங்களில் மின் விளக்குகள் பொருத்துவது மிகவும் அவசியமாகிறது. இந்த சூழ்நிலை மற்றும் மேற்கண்ட பணிகள் செய்ய தேவையான மின்சார சாமான்கள் நகராட்சி இருப்பில் இல்லாததால், உடனடியாக அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4.00 லட்சம் (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) ஆகும். எனவே, இந்த உத்தேச செலவினத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் நிதி ஆண்டில் பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.234/2022/இ1)

பொருள்– 22. குளித்தலை நகராட்சி வடக்கு முத்துராஜா தெருவில் உள்ள சமுதாயக் கழிப்பிடம் செயல்படுத்தப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இருக்கிறது. கதவுகள், கோப்பைகள், பூச்சுக்கள், பைப்லைன் மற்றும் நச்சுத் தொட்டிகள் போன்றவை மராமத்து செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட கழிப்பிடத்தை மராமத்துப் பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ.4.00 லட்சத்திற்கு (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்) தயார் செய்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.472/2022/இ1)

பொருள்– 23. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3 மற்றும் 19 தெற்கு தேவதானம் மற்றும் டைமண்ட் சிட்டி இவை இரண்டு பகுதிகள் மணப்பாறை சாலை கிழக்கு மேற்கு திசைகளில் அமைந்துள்ளது. இந்த பகுதியில் காவேரி குடிநீர் குழாய்கள் நாளது தேதிவரை பதிக்கவில்லை. மேலும், இந்த பகுதிகளுக்கு செல்வதற்கு தடையாக இரயில்வே லைன் அமைந்துள்ளது. தற்போது குடிநீர் அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்க வேண்டியதின் அவசியம் கருதி, பைப் லைன் அமைக்கவும் அதற்குரிய அனுமதி இரயில்வே துறையிடம் பெறுவதற்கும், அதற்குரிய செலவினத்தை இரயில்வே துறை தெரிவிக்கும் நிலையில் செலுத்துவதற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.480/2022/இ1)

பொருள்– 24. குளித்தலை நகராட்சி வார்டு எண்.2ல் தேவதானம் பகுதியில் உள்ள சின்டெக்ஸ் டேங் அருகில் தண்ணீர் குளம்போல் தேங்கி நிற்கிறது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதார கேடு ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு வாய்க்கால் அமைத்து, ஏற்கனவே உள்ள பழைய வாய்க்காலில் இணைத்து விடலாம் என்பதால், அதற்கு மதிப்பீடு ரூ.3.00 லட்சத்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) தயார் செய்யப்பட்டு, செலவினத்திற்கும், பணி செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ம் ஆண்டு பொது நிதியிலிருந்து ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.501/2022/இ1)

பொருள்– 25. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட காவேரிநகர் நூலகம் முதல் அண்ணாநகர் புறவழிச்சாலை மணப்பாறை சாலை வரை, சாலையின் இருபுறங்களிலும் முள்செடிகள் அதிகளவில் உருவாகி முட்புதர்களாக உள்ளதால், பொதுமக்களின் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாகவும், பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் கொசு உற்பத்தியாவதை தடுக்கும் பொருட்டும், உழவர்சந்தை பூங்கா, அண்ணாநகர் பூங்கா இடத்தில் உள்ள முட்செடி புதர்களை அகற்றவும், ரயில்வே சாலையில் உள்ள மண்மேடுகளை அகற்றவும், சம்பந்தப்பட்ட வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் நேரடியாக கோரியுள்ளார்கள். எனவே, மேற்கண்ட பணிகளை செய்வதற்கு இந்நகராட்சியில் உள்ள Front and Back Loader வாகனம் பழுதடைந்துள்ளதால், பொதுமக்களின் நலன் கருதியும், நோய் தொற்று பரவாமல் இருக்கும்பொருட்டு, அவசர அவசியம் கருதி தனியார் வாகனத்தின்மூலம் மேற்கண்ட பணிகளான முட்செடிகள், மண் மேடுகளை அகற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.90,000/–க்கு (ரூபாய் தொண்ணூறு ஆயிரம் மட்டும்) நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.499/2022/எச்1)

..8..

பொருள்– 26. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட செக்கடிபுதுத் தெருவில் உள்ள பொதுக் கழிப்பிடத்தினை மராமத்துப் பணி செய்யாமல் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு மிகுந்த சிரமமாக உள்ளதால், அதனை மராமத்துப் பணி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 லட்சத்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் நிதி ஆண்டில் வருவாய் நிதியிலிருந்து ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.500/2022/இ1)

பொருள்– 27. இந்நகராட்சியின்மூலம் 15வது நிதிக்குழு மான்யம் 2020–2021 மற்றும் 2021–2022 (Un-tied Grant) திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு 08.04.2022ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| | **2020–2021ஆம் ஆண்டு (Un-tied Grant)** | | |
| 1 | குடிநீர் விநியோக குழாய் மராமத்துப் பணி | திரு.V.P.தனபால்,குளித்தலை | 0.29 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 1.78 % அதிகம் |
| 2 | குடிநீர் வால்வுகள் மற்றும் தொட்டி கட்டுவது | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 0.07 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 1.15 % அதிகம் |
| 3 | பிள்ளைத் தோப்பு தெருவில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 0.02 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 1.09 % அதிகம் |
| 4 | மணத்தட்டை தெற்கு தெருவில் வடிகால் வாய்க்கால் மராமத்துபணி | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.12 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 0.79 % அதிகம் |
| 5 | தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலை மராமத்துப் பணி | திரு.V.P.தனபால்,குளித்தலை | 0.23 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 1.70 % அதிகம் |
| 6 | மணத்தட்டை தெற்கு தெருவில் கழிப்பிடம் மராமத்துப் பணி | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.04 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 0.97 % அதிகம் |
| | **2021–2022ஆம் ஆண்டு (Un-tied Grant)** | | |
| 7 | பழைய சுங்ககேட் அருகில் பொது கழிப்பிடம் மராமத்து | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 0.66 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 1.23 % அதிகம் |
| 8 | தெற்கு தேவதானம் தெருவில் கழிப்பிடம் மராமத்து பணி | திரு.P.அண்ணாத்துரை, குளித்தலை. | 0.07 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 1.03 % அதிகம் |
| 9 | பள்ளிவாசல் தெருவில் கழிப்பிடம் மராமத்து பணி | திரு.V.P.தனபால்,குளித்தலை | 0.05 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 2.26 % அதிகம் |
| 10 | மலையப்பநகர் கழிப்பிடம் மராமத்து பணி | திரு.P.அண்ணாத்துரை, குளித்தலை. | 0.06 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 0.94 % அதிகம் |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட குறைந்த சதவீதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

பொருள்– 28. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளிலும் மின்கல வாகனங்கள்மூலம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் குப்பைகள், கழிவுகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. சிறு, சிறு தெருக்கள், சந்துகளில் மின்கல வாகனங்கள் செல்ல இயலாத நிலை உள்ளதால், இந்நகராட்சியில் பழுதடைந்துள்ள தள்ளுவண்டிகளை பராமரிப்பு செய்து, திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிக்கு பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.533/2022/எச்1)

<u>புதிய பொருள்கள்–</u>

பொருள்– 29. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கும் இந்நகராட்சியின்மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் மின்தடை ஏற்பட்டாலோ அல்லது பகிர்மான குழாய்களில் பழுதுகள் ஏதேனும் ஏற்படும்பட்சத்தில், அவசரம் அவசியம் கருதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கும், திருவிழா காலங்களில் பக்தர்கள் தேவைக்காக குடிநீர் விநியோகம் செய்வதற்கும் புதியதாக குடிநீர் வாகனம் வாங்க வேண்டியுள்ளது. மேலும், இந்நகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை அமைக்க இயலாத காரணத்தால் ஆங்காங்கே கழிவுநீர் தேங்கிவிடுகிறது. இதன் காரணமாக பொதுமக்களுக்கு தொற்று நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, பொதுமக்களின் வீடுகளில் தேங்கும் கழிவுநீர் மற்றும் மழைகாலங்களில் ஆங்காங்கே தேங்கும் மழைநீர் ஆகியவற்றினை அப்புறப்படுத்த கம்பரசர் மோட்டாருடன்கூடிய புதியதாக கழிவுநீர் வாகனம் வாங்க வேண்டியுள்ளது.

| வ. எண். | வாகன விபரம் | தொகை ரூ. | |
|---|---|---|---|
| 1) | குடிநீர் வாகனம் வாங்குதல் (Water Tanker Lorry) | ரூ. | 10,00,000.00 |
| 3) | கழிவுநீர் வாகனம் வாங்குதல் (Sullage Tanker Lorry) | ரூ. | 20,00,000.00 |
| | மொத்தம் | ரூ. | 30,00,000.00 |

மேற்கண்ட வாகனங்கள் (குடிநீர் வாகனம் மற்றும் கழிவுநீர் வாகனம்) புதியதாக வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,00,000/–க்கு (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட வாகனங்கள் வாங்குவதற்கு ஆகும் செலவினத்தை 2022–2023ஆம் ஆண்டு வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.452/2022/இ1)

பொருள்– 30. குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் 15KVA பராமரிப்பு செலவு செய்வதற்கும் (பூட்டு, பேட்டரி, செல்ப் மோட்டார், ஆயிற் மாற்றி பராமரிப்பு செய்வதற்கும்) மற்றும் நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 45KVA ஜெனரேட்டர் பராமரிப்பு பணிகள் முழுவதும் செய்வதற்கும் மற்றும் ஜெனரேட்டர் நல்லநிலையில் இயங்கவும், மின் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில் குடிநீர் பணி தடையில்லாமல் விநியோகம் செய்வதற்கும் உடனடியாக பழுது நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணிக்கு செய்யும் செலவினத்தை 2022–2022ம் ஆண்டு வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.469/2022/இ1)

பொருள்– 31. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான பெரியார்நகர் பரிசல்துறை ரோட்டில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் 63KVA ஜெனரேட்டர் பொருத்தி பராமரிக்கப்பட்டு வந்த சூழ்நிலையில், தற்போது பழுதாகி ஜெனரேட்டர் இயங்காமல் உள்ளது. எனவே, குடிநீர் விநியோகம் செய்வதற்கு பழுதான ஜெனரேட்டரை உடனடியாக பழுது பார்ப்பு செய்வது அவசியமாகிறது. எனவே, அவசர அவசியம் கருதி பெரியார்நகர் ஜெனரேட்டரை பழுது நீக்கம் செய்ய அனுமதி வேண்டியும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இதற்கு செய்யப்படும் செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து (2022–2023) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.470/2022/இ1)

பொருள்– 32. குளித்தலை நகராட்சி வார்டு எண்.08, பேராளம்மன்கோவில்தெருவில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடம், பேருந்து நிலையம் அருகில் உள்ள கழிப்பிடம் ஆகிய இரண்டிலும் Water Closet, கோப்பைகள், கதவுகள், மின் விளக்குகள் மற்றும் தண்ணீர் குழாய்கள் உடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றால்போல் இல்லாததாலும், மேலும் பேராளம்மன்கோவில் பின்புறம் பழுதடைந்துள்ள சிமெண்ட் சாலையை சரி செய்யவும் ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கும் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்), மேற்கண்ட பணியினை செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் நிதி ஆண்டின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.451/2022/இ1)

பொருள்– 33. குளித்தலை நகராட்சி வார்டு எண்.20, உழவர்சந்தை அருகில் உள்ள பெண்கள் கழிப்பிடம் மற்றும் அண்ணா சமுதாய மன்றம் பின்புறம் உள்ள கழிப்பிடம் இவைகள் இரண்டும் பழுதடைந்து பயன்படுத்துவதற்கு ஏதுவாக இல்லாததால், அதனை பழுது நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, பொதுமக்களின் நலன்கருதி மேற்கண்ட பணியினை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்தில் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) பணியினை செய்வதற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் (2022–2023ஆம் ஆண்டு நிதியில்) மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.462/2022/இ1)

பொருள்– 34 இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, வைஸ்யாள்தெரு, நாராயணன்பிள்ளைதெரு, மார்க்கட்தெரு ஆகிய தெருக்களில் உள்ள வடிகால் மற்றும் சிமெண்ட் சாலைகள் பழுதடைந்துள்ளது. எனவே, இதனை சரிசெய்ய ஆகும் உத்சே செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் நிதி ஆண்டின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.532/2022/இ1)

பொருள்– 35. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை(நிலை) எண்.52, நாள்–30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர், நாள்–01.04.2022ன்படி இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள சொத்துவரி சீராய்வு குறித்த அறிவிப்பினை தினசரி நாளிதழ்களான தினகரன், தினத்தந்தி மற்றும் Trinity Mirror ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்கு ஏற்பட்ட செலவினம் தொகை ரூ.80262/–ஐ (ரூபாய் என்பதாயிரத்து இருநூற்று அறுபத்து இரண்டு மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | தினகரன் | ரூ. | 29232.00 |
| 2) | Trinity Mirror | ரூ. | 28728.00 |
| 3) | தினத்தந்தி | ரூ. | 22302.00 |
| | மொத்தம் | ரூ. | 80262.00 |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்காணும் செலவினங்களை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.470/2022/அ1)

பொருள்– 36. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.10053/2020/சி1, 2, 3, 4, 5ன் மூலம், திரு.என்.புகழேந்தி, பொறியாளர் மற்றும் ஆணையர்(பொறுப்பு), திருமதி.சு.சத்யா, கணக்கர் மற்றும் மேலாளர்(பொறுப்பு), திருமதி.ந.யசோதாதேவி, இளநிலை உதவியாளர் மற்றும் திரு.கி.சரவணன், வருவாய் உதவியாளர் ஆகியோரை தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு ந.க.எண்.10053/2020/சி2–2, 3, 4, 5 ஆகியவற்றில் குற்றச்சாட்டு குறிப்பாணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

மேற்படி நடவடிக்கைகளை எதிர்த்து திருமதி.சு.சத்யா, சென்னை உயர்நீதிமன்றத்தில் WP.No.6893/2022 மற்றும் WP(MD)No.9024/2022 ஆகிய இரு வழக்குகளை தொடர்ந்து உள்ளார். இவ்வழக்குகளில் நகராட்சி நிர்வாக ஆணையரை 1வது பிரதிவாதியாகவும், நகராட்சி ஆணையர், குளித்தலை அவர்களை 2வது பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. அவற்றில் நகராட்சி ஆணையர் சார்பாக வாதாட திரு.லூர்துபவுல்மௌரியா, பி.ஏ.,பி.எல்., சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டு உள்ளார். அவ்வழக்குகளுக்கான வழக்காடு கட்டணமாக தலா ரூ.15,000/– வீதம் இரண்டு வழக்குகளுக்கு ரூ.30,000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.603/2021/சி1)

பொருள்– 37. தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிக்கு மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற துறையினர்மூலம் (MOUD) மூன்று நட்சத்திரம் அங்கீகாரம் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக குளித்தலை நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை மேலாண்மை விதிகளின் முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருவது தொடர்பாக பொதுமக்களின் கருத்து மற்றும் ஆட்சேபணைகள் குறித்து தினசரி நாளிதழான தினபூமி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.8686/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தினபூமி தினசரி நாளிதழுக்கு தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.247/2022/எச்1)

பொருள்– 38. தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் குளித்தலை நகராட்சியில் 100% திறந்தவெளியில் மலம் கழித்தல் (Open Defecation Free+) இல்லாத நகராட்சியாக பிரகடனப்படுத்துவதற்கு பொதுமக்களின் கருத்து மற்றும் ஆட்சேபணைகள் தெரிவிக்கக்கோரி மக்கள் குரல் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.4738/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தினசரி நாளிதழுக்கு தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.248/2022/எச்1)

பொருள்– 39. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, மீன்காரத்தெரு மற்றும் சேதுரெத்தினம்பிள்ளைத்தெரு மெயின்ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள தார்சாலைகள் பழுதடைந்துள்ளது. எனவே, இதனை சரிசெய்ய ஆகும் உத்சே செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் நிதி ஆண்டின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.532/2022/இ1)

பொருள்– 40. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் உள்ள பொதுமக்கள் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும் மற்றும் அவசர அவசியம் கருதி கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்திற்கு நகராட்சி ஆணையர் மற்றும் இதர அலுவலர்கள் சென்று வருவதற்கு ஒரு ஈப்பு வாகனம் தேவைப்படுவதாலும், மேலும் நகர்மன்றத் தலைவர் அலுவலக பணி தொடர்பாக சென்றுவர தனியாக ஒரு ஈப்பு வாகனம் தேவைப்படுவதாலும், இரண்டு பொலிரோ ஈப்பு வாகனங்கள் DGS&D விலை விகிதத்தில் அலுவலக பயனபாட்டிற்கு வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.452/2022/இ1)

பொருள்– 41. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, அண்ணாநகர் ராஜாஜிதெருவில் உள்ள வடிகால் பழுதடைந்துள்ளது. எனவே, இதனை சரிசெய்ய ஆகும் உத்சே செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் நிதி ஆண்டின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.532/2022/இ1)

பொருள்– 42. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.06, சபாபதிநாடார்தெரு புதிய கழிப்பிடம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2022–2023ஆம் நிதி ஆண்டின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.532/2022/இ1)

பொருள்– 43. **18.04.2022ஆம் தேதிய சாதாரணக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்.27ன் திருத்திய பொருள்.**

இந்நகராட்சியின்மூலம் 15வது நிதிக்குழு மான்யம் 2020–2021 மற்றும் 2021–2022 (Un-tied Grant) திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு 08.04.2022ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|---|
| | **2020–2021ஆம் ஆண்டு (Un-tied Grant)** | | (லட்சத்தில்) | |
| 1 | குடிநீர் விநியோக குழாய் மராமத்துப் பணி | திரு.V.P.தனபால்,குளித்தலை | 8.00 | 0.29 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | | 1.78 % அதிகம் |
| 2 | குடிநீர் வால்வுகள் மற்றும் தொட்டி கட்டுவது | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 9.50 | 0.07 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | | 1.15 % அதிகம் |
| 3 | பிள்ளைத் தோப்பு தெருவில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 9.00 | 0.02 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | | 1.09 % அதிகம் |
| 4 | மணத்தட்டை தெற்குதெருவில் வடிகால் வாய்க்கால் மராமத்து பணி | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 8.00 | 0.12 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | | 0.79 % அதிகம் |
| 5 | தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலை மராமத்துப் பணி | திரு.V.P.தனபால்,குளித்தலை | 8.00 | 0.23 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | | 1.70 % அதிகம் |
| 6 | மணத்தட்டை தெற்கு தெருவில் கழிப்பிடம் மராமத்துப் பணி | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | 5.00 | 0.04 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | | 0.97 % அதிகம் |
| | **2021–2022ஆம் ஆண்டு (Un-tied Grant)** | | | |
| 7 | பழைய சுங்ககேட் அருகில் பொது கழிப்பிடம் மராமத்து | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | 3.50 | 0.66 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | | 1.23 % அதிகம் |
| 8 | தெற்கு தேவதானம் தெருவில் கழிப்பிடம் மராமத்து பணி | திரு.P.அண்ணாத்துரை, குளித்தலை. | 5.00 | 0.07 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | | 1.03 % அதிகம் |
| 9 | பள்ளிவாசல் தெருவில் கழிப்பிடம் மராமத்து பணி | திரு.V.P.தனபால்,குளித்தலை | 5.00 | 0.05 % குறைவு |
| | | திரு.A.மாதேஸ்வரன், குளித்தலை. | | 2.26 % அதிகம் |
| 10 | மலையப்பநகர் கழிப்பிடம் மராமத்து பணி | திரு.P.அண்ணாத்துரை, குளித்தலை. | 11.50 | 0.06 % குறைவு |
| | | திரு.M.செந்தில்குமார், குளித்தலை. | | 0.94 % அதிகம் |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட குறைந்த சதவீதத்தில் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**(ந.க.எண்.1845/2021/இ1)**

*******

# குளித்தலை நகராட்சி

## குளித்தலை நகர்மன்றத்தின் 09.05.2022ஆம் தேதிய சாதாரணக் கூட்டத்தின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 9 | பதிவு செய்யப்பட்டது |
| 2 | 2 | 10 | பதிவு செய்யப்பட்டது |
| 3 | 3 | 11 | அனுமதிக்கபட்டது |
| 4 | 4 | 12 | அனுமதிக்கபட்டது |
| 5 | 5 | 13 | அனுமதிக்கபட்டது |
| 6 | 6 | 14 | அனுமதிக்கபட்டது |
| 7 | 7 | 15 | அனுமதிக்கபட்டது |
| 8 | 8 | 16 | அனுமதிக்கபட்டது |
| 9 | 9 | 17 | அனுமதிக்கபட்டது |
| 10 | 10 | 18 | அனுமதிக்கபட்டது |
| 11 | 11 | 19 | அனுமதிக்கபட்டது |
| 12 | 12 | 20 | அனுமதிக்கபட்டது |
| 13 | 13 | 21 | அனுமதிக்கபட்டது |
| 14 | 14 | 22 | அனுமதிக்கபட்டது |
| 15 | 15 | 23 | அனுமதிக்கபட்டது |
| 16 | 16 | 24 | அனுமதிக்கபட்டது |
| 17 | 17 | 25 | அனுமதிக்கபட்டது |
| 18 | 18 | 26 | அனுமதிக்கபட்டது |
| 19 | 19 | 27 | அனுமதிக்கபட்டது |
| 20 | 20 | 28 | அனுமதிக்கபட்டது |
| 21 | 21 | 29 | அனுமதிக்கபட்டது |
| 22 | 22 | 30 | அனுமதிக்கபட்டது |
| 23 | 23 | 31 | அனுமதிக்கபட்டது |
| 24 | 24 | 32 | அனுமதிக்கபட்டது |
| 25 | 25 | 33 | அனுமதிக்கபட்டது |
| 26 | 26 | 34 | அனுமதிக்கபட்டது |
| 27 | 27 | – | – |
| 28 | 28 | 35 | அனுமதிக்கபட்டது |
| 29 | 29 | 36 | அனுமதிக்கபட்டது |
| 30 | 30 | 37 | அனுமதிக்கபட்டது |
| 31 | 31 | 38 | அனுமதிக்கபட்டது |
| 32 | 32 | 39 | அனுமதிக்கபட்டது |
| 33 | 33 | 40 | அனுமதிக்கபட்டது |
| 34 | 34 | 41 | அனுமதிக்கபட்டது |
| 35 | 35 | 42 | அனுமதிக்கபட்டது |

..2..

| | | | |
|---|---|---|---|
| 36 | 36 | 43 | அனுமதிக்கபட்டது |
| 37 | 37 | 44 | அனுமதிக்கபட்டது |
| 38 | 38 | 45 | அனுமதிக்கபட்டது |
| 39 | 39 | 46 | அனுமதிக்கபட்டது |
| 40 | 40 | 47 | அனுமதிக்கபட்டது |
| 41 | 41 | 48 | அனுமதிக்கபட்டது |
| 42 | 42 | 49 | அனுமதிக்கபட்டது |
| 43 | 43 | 50 | ஏற்றுகொள்ளப்பட்டது |

ஒம்/—P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.